Regarding the Staff-Tennis, Dr. S. Rengamani won the runners-cup in Singles in the State Level Staff Tennis Tournament held at Poondi Pushpam College, Poondi, Dr. S. Rengamani and Dr. S. Ramesh also went on to win the doubles-runners cup in the same tournament. Dr. S. Rengamani and Mr. S. Kalyanaraman participated in the M. S. University Staff Tennis Tournament and went on to win the Doubles-Runner cup event, In the same event, Dr. S. Rengamani won the Singles Runners-up trophy. In the C-Zone tournament, Dr. S Rengamani won the Singles-Runners-up trophy that was conducted by the M. K University.

I thank Shri K. Dhanavel, I A S. for presiding over the function and my thanks are also due to Shri E.MA. Masanamuthu, I.P.S. for his cordiality in giving away the prizes.

I express my sincere and heartfelt thanks to the Management, the Secretary and the Principal and to all those staff members who have rendered their kind encouragement and guidance.

My special thanks are due to the boys & girls and to their house captains for their kind Co-operation and participation which has made the event a more successful one.

*V. Perumal*, M.A., M.P.Ed.
Director of Physical Education.

## ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி,
## ஆழ்வார்குறிச்சி

# இளைஞர் நலத்துறை

1999--2000ம் கல்வியாண்டில் நம் கல்லூரி இளைஞர் நலத்துறை ஒருங்கிணைப்பாளர் நூலகர் S. சூரியநாராயணன் சிறப்புடன் செயலாற்றிய நிலையில் நவம்பர் 99ல் அவரது "ஆய்வு நிறைஞர்" [Ph. D.] பட்ட ஆய்வை மேற்கொள்ளும் பொருட்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்றுள்ளார். அன்னாரின் விடுப்பின் காரணமாக "இளைஞர் நலத்துறை" பொறுப்பினைக் கல்லூரி முதல்வரின் வேண்டுதலின் பெயரில் நான் ஏற்றுக்கொண்டேன். இப் பொறுப்பினைச் சிறப்பாகச் செயலாற்றிட முதல்வர் பேராசிரியர் M. நடராஜன், தமிழ்த்துறைத் தலைவர் S. பட்டாபிராமன், பேராசிரியர் L. ரவிசங்கர் மற்றும் மாணவ-மாணவியர்களும் நல்ல ஒத்துழைப்பு தந்தனர்.

இக் கல்வியாண்டில் கல்லூரி & பல்கலைகழக அளவிலும், மாநில அளவிலும் நடைபெற்ற பல்வேறு கலை இலக்கிய நுண்ணறிவுப் போட்டிகளில் நம் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு அதிகப் பரிசுகளைப் பெற்று நம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

இன்றைய இளைஞர்கள் பல்வேறு திறமைகளை (Skills) நிரம்பப் பெற்றவர்கள் என்பது உண்மை. ஆனால் அத்தகையத் திறமைகள் "இலைமறை காயாக" அமைந்திருக்கின்றன என்பதும் உண்மை. எனவே மாணவர்களின் திறமைகளில் மிகுந்த அக்கறைகொண்ட நம்கல்லூரி நிர்வாகமும், முதல்வரும், இளைஞர் நலத்துறை வழிகாட்டுநரும் மேற்கொண்ட சீரிய முயற்சிகளினாலும், சரியான வழிகாட்டுதலினாலும் நம் கல்லூரிக்கு இக் கல்வியாண்டில் மொத்தமாக 68 பரிசுகள் கிடைத்துள்ளன.

கலை, இலக்கியப் போட்டிகளான பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கர்நாடக இசை, மெல்லிசை, குழுப்பாடல், ஊமை நாடகம் [Mime] கருவிகள் இசைத்தல் (வயலின், தவில்) கட்டுரைப் போட்டி, (தமிழ் & ஆங்கிலம்) பேச்சுப்போட்டி (தமிழ் & ஆங்கிலம்) கவிதைப் போட்டி, கூட்டுக்கலை ஆகியனவற்றிலும், நுண்ணறிவுப் போட்டிகளான ஓவியம், கார்ட்டூன் வரைதல், நிழற்படம் எடுத்தல், ரங்கோலி, வினாடி-வினா (Quiz) திறமைத்திறன் போட்டி (Talent Exam, Talent Show) ஆகியனவற்றிலும் நம் கல்லூரி மாணவ-மாணவியர்கள் பல்கலைக் கழக அளவில் ஒட்டுமொத்த சாம்பியன்-ஷிப் பட்டத்தையும் (சப்தம் 2000) இரண்டு கண்கவர் கவசப் (Shield) பரிசில்களையும், தங்க நாணயப் பரிசினையும், பணப் பரிசினையும், விலை மதிப்புடைய நூல்களையும், தங்கம், வெள்ளிப் பதக்கங்களையும், வெள்ளி, வெண்கலப் பாராட்டுப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் பெற்றுவந்துள்ளனர்.

இக் கல்வியாண்டில் 25 வகையானப் போட்டிகளில் 31 முதற்பரிசுகளும், 13 வகையானப் போட்டிகளில் 17 இரண்டாம் பரிசுகளும், 12 வகையானப் போட்டிகளில் 17 மூன்றாம் பரிசுகளும், சிறப்புப் பரிசுகளாக அரை பவுண் தங்க நாணயப் பரிசும், ரூ. 500 ரொக்கப்பரிசும், ரூ. 500 மதிப்புள்ள கடிகாரமும் சேர்த்து மொத்தம் 68 பரிசுகள் கிடைத்துள்ளன.

**அதிகப் பரிசுகள் பெற்றுவந்த மாணவர்கள் விபரம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | செல்வி R. வாசவி நித்யா | I B.Com. | 10 பரிசுகள் |
| 2. | செல்வன் T. மாடசாமி | III B.Sc. (MM) | 7 ,, |
| 3. | செல்வி S. சுமதி | II B.Sc (PM) | 5 ,, |
| 4. | செல்வன் S. சத்ய கைலாஷ் | II B.Sc. (CM) | 4 ,, |
| 5. | செல்வி V. சண்முகசுந்தரி | II B.Sc. (MM) | 3 ,, |
| 6. | செல்வன் K,N. லட்சுமி நரசிம்மன் | II B.Sc. (PM) | 3 ,, |
| 7. | செல்வி A. சித்திரவல்லி | III B.Sc. (ZM) | 3 ,, |

**பாராட்டுக் கூட்டம் :**

24-04-2000 திங்களன்று கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு அதிகப் பரிசுகள் பெற்றுவந்த சிறந்த மூன்றுமாண்டு மாணவர்களுக்கு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

இப் பாராட்டுக் கூட்டத்தில் கல்லூரிச் செயலர் K.H. நாராயணன் அவர்கள் சிறந்த மாணவர்களைப் பாராட்டி அமரர் சி. செல்லப்பாண்டியன் நினைவுப் பரிசில்களை வழங்கினார். இக்கூட்டத்தில் முதல்வர் M. நடராஜன் மற்றும் நாட்டுப் பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் A. J. A. இரஞ்சித் சிங் (அணி எண் 19) பேராசிரியை B. P. உஷா (அணி எண் 18) தேசிய மாணவர் படை அதிகாரி II Lt. M. குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**சிறந்த மாணவர்கள் பட்டியல் :**

| | | |
|---|---|---|
| 1 | G. மணிகண்டன், III B.Com. | சிறந்த N C.C. மாணவர் |
| 2 | S. ஸ்ரீராம், III B.Sc (CM) | சிறந்த பொது அறிவு மாணவர் |
| 3 | T. மாடசாமி, III B.Sc. (MM) | சிறந்த கலைத்திறன் மாணவர் |
| 4 | S. கோவிந்தராஜ், III B.Com. | சிறந்த நாட்டு நலத் தொண்டர் |
| 5 | அகிலா, III B Sc. (CM) | சிறந்த குரல் வளமுடையவர் |
| 6 | கோமதி மகாலட்சுமி, III B.Sc. (MM) | சிறந்த கலைத்திறன் பெற்ற மாணவி |
| 7 | A. சித்ரவல்லி, III B.Sc. (ZM) | சிறந்த கரகாட்டக் கலைஞர் |
| 8 | A. அமுதா ராஜேஸ்வரி, III B.Sc. (MM) | சிறந்த மேடைப் பேச்சாளர் |
| 9 | B. மாரிச்செல்வம், III B.Com. | சிறந்த உயிர்காக்கும் இரத்த தான தொண்டர் |

## இக் கல்வியாண்டில் மாணவர்கள் பெற்றுவந்த பரிசுகள் விபரம் :

| வ. எண். | போட்டி நாள் | மாணவர் பெயர் & வகுப்பு | போட்டித் தலைப்பு | போட்டியை நடத்தியவர்கள் & போட்டி நடைபெற்ற இடம் | பரிசு நிலை |
|---|---|---|---|---|---|
| 1 | 19-02-2000 | S. சத்யகைலாஷ், II B.Sc. (MM) | வயலின் இசைத்தல் | இளைஞர் நலத்துறை ம. சு. பல்கலைக்கழகம் தூய சவேரியார் கல்லூரி பாளையங்கோட்டை | I |
| 2 | 26-10-1999 | R. வாசவி நித்யா, I B.Com. | பாட்டுக்குப்பாட்டு | அவள் விகடன் - பத்திரிக்கை, திருநெல்வேலி | I |
| 3 | 19-02-2000 | S. சுமதி, II B.Sc. (PM) | பரதநாட்டியம் | இளைஞர் நலவிழா ம. சு. பல்கலைக்கழகம் தூய சவேரியார் கல்லூரி பாளையங்கோட்டை | I |
| 4 | 16-01-2000 | S. அமுதா ராஜேஸ்வரி, III B.Sc. (MM) | பேச்சுப்போட்டி | திருவள்ளுவர் கழகம், ஆழ்வார்குறிச்சி | I |
| 5 | 31-12-1999 | T. மாடசாமி & குழு, III B.Sc. (MM)<br>A. சித்திரவல்லி, III B.Sc (ZM)<br>H. தீபா, II B.Sc. (MM)<br>S. மயில்ராகவன் ,,<br>R. வாசவி நித்யா, I B.Com. | கூட்டுக்கலை<br>,,<br>,,<br>,,<br>,, | சப்தம் - 2000, தூய சவேரியார் மெட்ரிக்பள்ளி வண்ணார்பேட்டை<br>,,<br>,,<br>,,<br>,, | I<br>I<br>I<br>I<br>I |
| 6 | 18-03-2000 | K. மீனாட்சி, I B.Sc. (PM) | கட்டுரைப்போட்டி | குறிஞ்சி வாசகர் பேரவை, மேலகரம் | I |
| 7 | 09-01-2000 | R. ஈஸ்வர், II B.Sc. (PM) | பேச்சுப்போட்டி (ஆங்கிலம்) | ஃபிளாஷ் - 2000 மாவட்ட அறிவியல் மையம் திருநெல்வேலி | I |
| 8 | 31-12-1999 | R. வாசவி நித்யா, I B.Com. | தனி இசைப்பாடல் (கர்நாட்டிக்) | சப்தம் - 2000, தூய சவேரியார் மெட்ரிக்பள்ளி வண்ணார்பேட்டை | I |
| 9 | 03-10-1999 | S. சத்யகைலாஷ், II B.Sc. (CM) | வயலின் இசைத்தல் | சாராதக்கர் கல்லூரி, பாளையங்கோட்டை | I |
| 10 | 20-02-2000 | S. சுமதி, II B.Sc. (PM)<br>S. மீனாட்சி சுத்தரம், I B.Sc. (CM) | ரங்கோலி<br>,, | இளைஞர் நலத்துறை ம. சு. பல்கலைக்கழகம் தூய சவேரியார் கல்லூரி பாளையங்கோட்டை | I |
| 11 | 31-12-1999 | S. சத்யகைலாஷ், II B.Sc. (CM) | வயலின் இசைத்தல் | சப்தம் - 2000, தூய சவேரியார் மெட்ரிக்பள்ளி வண்ணார்பேட்டை | I |
| 12 | 27-02-2000 | S. ஸ்ரீராம், III B.Sc. (CM) | திறமைத்திருவிழா | இளைஞர் நலத்துறை ம. சு. பல்கலைக்கழகம் பல்கலைக்கழக வளாகம், அபிஷேகப்பட்டி | I |

| வ. எண். | போட்டி நாள் | மாணவர் பெயர் & வகுப்பு | போட்டித் தலைப்பு | போட்டியை நடத்தியவர்கள் & போட்டி நடைபெற்ற இடம் | பரிசு நிலை |
|---|---|---|---|---|---|
| 13 | 08-03-2000 | S. அமுதா ராஜேஸ்வரி, III B.Sc. (MM) | பேச்சுப்போட்டி | N S S & Y R C உலக பெண்கள் தினவிழா S. P. K. கல்லூரி, ஆழ்வார்குறிச்சி | I |
| 14 | 20-12-1999 | A. அருள்செல்வன், I B.Sc. (MM) | VACS - தேர்வு | விவேகானந்த கேந்திரம் கன்னியாகுமரி S P K கல்லூரி, ஆழ்வார்குறிக்சி | I |
| 15 | 03-10-1999 | S. சுமதி, II B Sc. (PM)<br>K. மீனாட்சி, ,, | ரங்கோலி<br>,, | ரோட்லேண்ட் - 99, சாராதக்கர் கல்லூரி<br>,, பாளையங்கோட்டை | I |
| 16 | 31-12-1999 | T. மாடசாமி, III B.Sc. (MM) | கிராமியப்பாடல் | சப்தம் - 2000, தூய சவேரியார் மெட்ரிக்பள்ளி வண்ணார்பேட்டை | I |
| 17 | 31-12-1999 | A. சித்திரவல்லி, III B.Sc. (ZM) | கரகம் | சப்தம் - 2000, ,, | I |
| 18 | 31-12-1999 | S சுமதி, II B.Sc. (PM) | பரத நாட்டியம் | சப்தம் - 2000, ,, | I |
| 19 | 26-02-2000 | S. சத்யகைலாஷ், II B.Sc. (CM) | வயலின் இசைத்தல் | மாகோசா - 2000, மர்காசியஸ் கல்லூரி நாசரேத் | I |
| 20 | 26-02-2000 | R. ஈஸ்வர், II B.Sc. (PM) | பேச்சுப்போட்டி (ஆங்கிலம்) | ,, ,, | I |
| 21 | 03-10-1999 | A. சித்திரவல்லி, III B.Sc. (ZM) | கரகம் | ரோட்லேண்ட் - 99, சாராதக்கர் கல்லூரி பாளையங்கோட்டை | I |
| 22 | 24-02-2000 | R வாசவி நித்யா, I B.Com. | தமிழ் இசைப்பாடல் | ரோட்டரி கிளப் அம்பாசமுத்திரம், அம்பாசமுத்திரம் | I |
| 23 | 23-04-2000 | V. சண்முகசுந்தரி, II B.Sc. (MM) | ஆய்வுக்கட்டுரைப் போட்டி | திருவள்ளுவர் கழகம், தென்காசி | I |
| 24 | 24-02-2000 | R. வாசவி நித்யா, I B.Com. | மெல்லிசைப்பாடல் | ரோட்டரி கிளப், அம்பாசமுத்திரம் | I |
| 25 | 08-03-2000 | R. வாசவி நித்யா, I B.Com. | ரங்கோலி | உலக மகளிர் தினம் நாட்டு நலப்பணித்திட்டம் ஆழ்வார்குறிச்சி | I |
| 26 | 10-03-2000 | T. மாடசாமி, III B.Sc. (MM) | மெல்லிசை | சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, பாளையங்கோட்டை | II |

| வ. எண். | போட்டி நாள் | மாணவர் பெயர் & வகுப்பு | போட்டித் தலைப்பு | போட்டியை நடத்தியவர்கள் & போட்டி நடைபெற்ற இடம் | பரிசு நிலை |
|---|---|---|---|---|---|
| 27 | 31-12-1999 | H. தீபா, II B.Sc. (MM) | கர்நாடக இசை | சப்தம் - 2000, தூய சவேரியார் மெட்ரிக்பள்ளி வண்ணார்பேட்டை | II |
| 28 | 25-09-1999 | R. வாசவி நித்யா, I B.Com. | கர்நாடக இசை | ரோட்னிவால் -99, சிவகாசி | II |
| 29 | 18-03-2000 | E. காளிகணேஷ் முருகன், II B.Sc. (ZM) | கவிதைப்போட்டி | குறிஞ்சி வாசகர் பேரவை, மேலகரம் | II |
| 30 | 31-12-1999 | T. மாடசாமி & குழு, III B Sc. (MM) | ஊமை நாடகம் | சப்தம் - 2000, தூய சவேரியார் மெட்ரிக் பள்ளி வண்ணார்பேட்டை | II |
| | | K. N. லட்சுமி நரசிம்மன், I B.Sc. (PM) | ,, | ,, ,, | II |
| | | V கணேசமூர்த்தி, I B.Sc. (PM) | ,, | ,, ,, | II |
| | | S. மயில்ராகவன், II B.Sc. (MM) | ,, | ,, ,, | II |
| | | H. கணபதி சுப்பிரமணியன், I B.Sc. (MM) | ,, | ,, ,, | II |
| 31 | 31-12-1999 | S. கோமதி சங்கரி, II B.Sc. (ZM) | நிழற்படம் எடுத்தல் | ,, ,, | II |
| 32 | 31-12-1999 | K. செந்தில்வேல் ராஜன், I B. Sc. (CM) | கவிதைப் போட்டி | ,, ,, | II |
| 33 | 31-12-1999 | T. மாடசாமி, III B. Sc. (MM) | தவில் இசைத்தல் | ,, ,, | II |
| 34 | 08-03-2000 | R. வாசவி நித்யா, I B.Com. | பரதநாட்டியம் | இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், ஆழ்வார்குறிச்சி | II |
| 35 | 31-12-1999 | T. மாடசாமி, III B.Sc. (MM) | திறமை காட்சிப் போட்டி | சப்தம்-2000, தூய சவேரியார் மெட்ரிக் பள்ளி வண்ணார்பேட்டை | II |
| 36 | 19-02-2000 | R. வாசவி நித்யா, I B.Com. | கர்நாடக இசை | இளைஞர் நலத்துறை ம. சு. பல்கலைக்கழகம் திருநெல்வேலி | II |
| 37 | 31-01-2000 | V. சண்முகசுந்தரி, II B.Sc. (MM) | ஆய்வு கட்டுரைப் போட்டி | மாநிலத் தமிழ்ச் சங்கம், பாளையங்கோட்டை | II |

| வ. எண். | போட்டி நாள் | மாணவர் பெயர் & வகுப்பு | போட்டித் தலைப்பு | போட்டியை நடத்தியவர்கள் & போட்டி நடைபெற்ற இடம் | பரிசு நிலை |
|---|---|---|---|---|---|
| 38 | 08-03-2000 | R. வாசவி நித்யா, I B.Com. | கர்நாடக இசை | இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், ஆழ்வார்குறிச்சி | II |
| 39 | 07-01-2000 | V. சண்முகசுந்தரி, II B.Sc. (MM) | ஆய்வு கட்டுரைப் போட்டி | முத்தமிழ் விழா<br>ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி | III |
| 40 | 08-01-2000 | S. ஸ்ரீராம், III B. Sc. (CM) | வினாடி-வினா போட்டி | மாவட்ட அறிவியல் மையம், திருநெல்வேலி | III |
| | | V. வெங்கடேஷ், II B. Sc. (CM) | ,, | ,, ,, | III |
| 41 | 25-09-1999 | S. சுமதி, II B. Sc. (PM) | ரங்கோலி | ரோட்னிவால் 99, சிவகாசி | III |
| | | K. மீனாட்சி, ,, | ,, | ,, ,, | III |
| 42 | 20-02-2000 | M. கமலா, III B. Sc. (CM) | வினாடி-வினா | இளைஞர் நலத்துறை ம. சு. பல்கலைக்கழகம் திருநெல்வேலி | III |
| | | V. வெங்கடேஷ், II B. Sc. (CM) | ,, | ,, ,, | III |
| 43 | 31-12-1999 | S. மீனாட்சி சுந்தரம், I B. Sc. (CM) | ரங்கோலி | சப்தம் 2000 தூய சவேரியார் மெட்ரிக் பள்ளி வண்ணார்பேட்டை | III |
| | | K. N. லெட்சுமி நரசிம்மன் I B.Sc. (PM) | ,, | ,, ,, | |
| 44 | 18-03-2000 | L. அலமேலு, I B.Sc. (MM) | கவிதைப் போட்டி | குறிஞ்சி வாசகர் பேரவை, மேலகரம் | III |
| 45 | 31-12-1999 | S. வெங்கடேஷ், II B. Com. | சொல் என்ன சொல் | சப்தம் 2000 தூய சவேரியார் மெட்ரிக் பள்ளி வண்ணார்பேட்டை | III |
| | | V. கணேசமூர்த்தி, I B.Sc. (PM) | ,, | ,, ,, | III |
| 46 | 19-02-2000 | K. N. லெட்சுமி நரசிம்மன் I B.Sc. (PM) | நிழற்படம் எடுத்தல் | இளைஞர் நலத்துறை ம. சு. பல்கலைக்கழகம் திருநெல்வேலி | III |
| 47 | 08-03-2000 | S. கனகவல்லி, I B.Com. | கட்டுரைப் போட்டி | உலக மகளிர் தினவிழா<br>S.P.K. கல்லூரி, ஆழ்வார்குறிச்சி | III |

| வ. எண். | போட்டி நாள் | மாணவர் பெயர் & வகுப்பு | போட்டித் தலைப்பு | போட்டியை நடத்தியவர்கள் & போட்டி நடைபெற்ற இடம் | பரிசு நிலை |
|---|---|---|---|---|---|
| 48 | 31-12-1999 | K. மீனாட்சி, I B.Sc. (PM) | கார்ட்டூன் வரைதல் | சப்தம் 2000 தூய சவேரியார் மெட்ரிக் பள்ளி வண்ணார்பேட்டை | III |
| 49 | 19-02-2000 | T. மாடசாமி, III B.Sc. (MM) | கிராமிய நடனம் | இளைஞர் நலத்துறை ம. சு. பல்கலைக்கழகம் பாளையங்கோட்டை | III |
| 50 | 26-01-2000 | M. பாலகணேசமூர்த்தி, I B.Sc (ZM) | சைக்கிள் பந்தயம் | குடியரசு தின மாணவர் போட்டி நிகழ்ச்சி ரோட்டரி கிளப், அம்பாசமுத்திரம் | III |

## சிறப்பு பரிசுகள் :-

| வ. எண். | போட்டி நாள் | மாணவர் பெயர் & வகுப்பு | போட்டித் தலைப்பு | போட்டியை நடத்தியவர்கள் & போட்டி நடைபெற்ற இடம் | பரிசு நிலை |
|---|---|---|---|---|---|
| 01 | 31-12-1999 | R. வாசவி நித்யா, I B.Com. | கலை இலக்கியப் போட்டிகள் | சப்தம் 2000 ம.தி.தா. மேனிலைப் பள்ளி திருநெல்வேலி | தங்க நாணயம் (½ பவுன்) |
| 02 | 31-12-1999 | ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி ஆழ்வார்குறிச்சி | கலை இலக்கியப் போட்டிகள் | இளைஞர் நலத்துறை ம. சு. பல்கலைக்கழகம் திருநெல்வேலி | ஒட்டுமொத்த 'சாம்பியன்ஷிப்' கண்கவர் கவசம் பரிசு (Shield) |
| 03 | 10-03-2000 | S. ராஜேஸ்வரி, I B.Sc. (PM) | கட்டுரைப் போட்டி | இ. மா. சங்கம் சப்தம் 2000 ம. தி. தா. மேனிலைப் பள்ளி, திருநெல்வேலி | கடிகாரம் |

**II Lt. M. குமார், M. A, M. Phil.**
இளைஞர் நலத்துறை வழிகாட்டுநர்

## முதுமொழியும் (லூன்யு) திருக்குறளும் :-

"முதுமொழி" என்ற லூன்யு சீனத்து மறை. திருக்குறள் உலகப் பொதுமறை. லூன்யு உரைநடையில் அமைந்தது. திருக்குறள் வெண்பா யாப்பில் அமைந்த ஒரு செய்யுள் நூல். லூன்யு ஒரு முறையான அமைப்பைப் பெறவில்லை. ஆனால் திருக்குறளில் இயல்வைப்புமுறை பாடல் வைப்புமுறை போன்றன வள்ளுவரின் கருத்து வளர்ச்சி, தருக்கமுறைச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றது. ஆனால் இரண்டுமே திட்டமும், நுட்பமும், செறிவும் உடைய அற இலக்கியங்களாகும்.

பெரும்பாலும், கன்பூசியசுவின் படைப்பில் தனது வாழ்வு, பண்பு, விருப்பு, வெறுப்பு, முன்னோர் வரலாறு, சமகாலத்தில் வாழ்ந்தோரின் குறிப்புகள் இடம்பெற்று ஓரளவிற்கு வரலாற்றுச் சாயல் பெற்றுள்ள நூலாக விளங்குகின்றது. ஆனால் திருக்குறளில் இத்தகைய எந்தக் கூறுகளையும் காணமுடியாது என்பது நாமறிந்ததே! கன்பூசியசும் திருவள்ளுவரும் கவிஞர்களின் காலகட்டத்தில் (The Period of Poets) தோன்றி கருத்துப்பயிர் வளர்த்தவர் என்ற அடிப்படையிலேயே இவ்விருவரின் படைப்புகள் ஒப்பிடப்படுகின்றது.

## கன்பூசியசு :-

கன்பூசியசுவின் நூல்களின் மூலம் அவரை ஓரளவிற்கு இனம் காண முடிகிறது. அதாவது அவரை ஒரு பழமை விரும்பி என்று கூறலாம். ஒழுக்க சம்பந்தப்பட்ட கோட்பாடுகளை வலியுறுத்தியுள்ளார். ஆனால் புத்தாக்க — புதிய — சமதர்ம உலகத்தைப் படைக்க அவர் விரும்பவில்லை. கிட்டத்தட்ட 2000 ஆண்டுகள் சீன மக்கள் கன்பூசியசின் நூற்கருத்துக்களை தங்களது சமயத் தத்துவமாகவே போற்றியுள்ளனர்.

## கன்பூசியசுவின் கொள்கைகள் :-

1 வாய்மை, நேர்மை
2 மிதவாதி, உலகியல்வாதி
3 மக்கள் ஒழுக்கமுடையவர்களாக வாழ வேண்டும். ஆனால் புனிதர்களாக வாழ்ந்திட எதிர்பார்க்கவில்லை.
4 மனிதர்களின் உரிமையைவிட—கடமைகளையே மிகுதியாக வலியுறுத்தியுள்ளார்.
5 கன்பூசியசுவின் கருத்துப்படி **'ஜென்'** அன்பு **'லி'** ஒழுக்கம் இவ்விரண்டும் முக்கியமாகும்
6 மனைவி—கணவனுக்கும், அரசன்—மக்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும்.
7 அரசன் வன்முறையின்றி அறநெறிமுன் மாதிரிகளால் ஆட்சி செய்ய வேண்டும்.
8 அரசு மக்களின் நலனுக்காக பாடுபடவேண்டும்.
9 பிறர் உனக்கு எதைச் செய்ய வேண்டாமென விரும்புகின்றாயோ அதை நீ பிறருக்குச் செய்யாதே!
10 தனிமனித ஒழுக்கமே எல்லாவகை அறத்திற்கும் அடிப்படை.
11 குறிக்கோள் உலகத்தை கற்பனையில் சிந்தித்துப் பார்ப்பதைவிட நடைமுறை வாழ்க்கையில் ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதே மேல்.

என்பவை அவரது நூல்வழி அறிய முடிகின்றது.

## வேற்றுமைகள் :-

கன்பூசியசுவின் கொள்கைகளும், கோட்பாடுகளும் நற்சார்புடையன. சீன நாடு, சீன நாட்டு மக்கள் பற்றிய பல செய்திகள் அவற்றில் இடம்பெற்று உள்ளன, கன்பூசியஸ் தம்மைப்பற்றி பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் திருவள்ளுவர் தமது படைப்பின் மூலம் தன்னைப் பற்றியோ, தான் வாழ்ந்த நாடு, மக்களினம் பற்றியோ, தனது விருப்பு-வெறுப்பு பற்றியோ குறிப்பாக எதையும் கூறவில்லை.

திருவள்ளுவர் மனித சமுதாயத்தில் கடைநிலையில் உள்ளவனும், வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டியுள்ளார். மனிதனுடைய மனச்சான்று தான் அவருடைய கொள்கையின் உரைகல். தனிமனித ஒழுக்கமே! (Individual Ethics) தனிமனித முன்னேற்றமே!! அவருடைய இரு கண்கள்.

1) கன்பூசியஸ் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இருப்பது இயல்பு என்கிறார். ஏழை—பணக்காரன், ஆண்டான்—அடிமை, தொழிலாளி—முதலாளி, குலம்—குடி முதலியவற்றால் வேறுபாடுகள் சமுதாயத்தின் கட்டுக்கோப்பிற்கு தேவை என்கிறார். ஆனால் திருவள்ளுவரோ ஒருவனுடைய பிறப்பை வைத்து உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று கூறவில்லை. இதனையே தம் திருக்குறளில்

''மேலிருந்தும் மேல் அல்லார் கீழிலிருந்தும் கீழ்அல்லார்'' — என்றும்
''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''—972 என்றும் கூறுகின்றார்.

செய்கின்ற தொழிலைவைத்துக்கொண்டு ஒருவன் உயர்ந்தவன், தாழ்ந்தவன் உண்டேயன்றி. பிறப்பினால் வேற்றுமை கிடையாது. செய்யும் தொழிலிலேதான் வேற்றுமை. ஆம் குப்பைகூட்டும் தொழிலாளி, தான் செய்கின்ற வேலையில் செம்மை, நேர்மை இருந்தால் அவன் உயர்ந்தவன். நீதிமன்றத்தில் பணிபுரியும் நீதிபதி தான் செய்யும் வேலையில் செம்மை, நேர்மை இல்லையென்றால் அவன் தாழ்ந்தவன்.

2) 15 வயதில் நான் கல்வி கற்பதில் கவனம் செலுத்தினேன்.
30 வயதில் மன உறுதியுடையவனாக இருந்தேன்.
40 வயதில் எனக்கு ஐயங்கள் இல்லை.
50 வயதில் ஆண்டவனுடைய கட்டளைகளை நன்கு அறிந்தேன்.
60 வயதில் என்னுடைய காதுகள் உண்மைகளை வரவேற்றன.
70 வயதில் நீதிநெறி வழுவாமல் வாழ முடிந்தது. (முது. 2 : 4)

ஆனால் வள்ளுவரின் சுயவாழ்க்கைப் பற்றி நாம் எதுவும் அறிய முடியவில்லை.

3) தீமையை வெல்வதற்கு; அன்பு காட்டுவது சிறந்த வழியல்ல. தீமையை அன்பால் விலக்குவது தவறு.

வள்ளுவர் இக்கருத்தை இரண்டு நிலைகளில் விளக்கியுள்ளார்.
1) அரசனுக்குரியது 2) தனிமனிதனுக்குரியது

ஒரு அரசன் தன்நாட்டு மக்களுக்குத் தீமை செய்வோரைக் கண்டு அன்பு காட்ட வேண்டாம். மாறாக குற்றம் கடியப்பட வேண்டும் என்றும்.

''கொலையிற் கொடியாரை வேந் தொறுத்தல் பைங்கூழ்
களை கட்டதனோடு நேர்'' — (550)
''குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்'' — (549)
''இளைதாக முள்மரம் கொல்க களையுதிர்
கை கொல்லும் தாழ்ந்த விடத்து'' — (879)

கொடியாரை வேந்து ஒறுத்தல் என்றும், இளையதாக முள்மரம் கொல்க என்றும் அரசனுக்கு ஆணையிட்டு தீமையைக் கொல்வது அரசநீதி என்கிறார். ஆனால் தனிமனித வாழ்க்கையில் தீமை செய்தவரைப் பழிவாங்காமல் அன்புடன் அவருக்கு நன்மை செய்ய வேண்டும் என்கிறார்.

''சிறப்பு ஈனும் செல்வம்பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசற்றார் கோள்'' —(311)
''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'' —(314)

4) கன்பூசியஸ்—அறம், பொருள்பற்றி பேசுகின்றார். இன்பத்தைப் பேசவில்லை ஆனால் வள்ளுவர் அறம், பொருள், இன்பம், வீடு பேறு என்ற வாழ்வின் உறுதிப் பொருளாகிய நான்கையும் பேசுகின்றார்.

5) 'கன்பூசியஸ் கொள்கைகள்' சமயக் கோட்பாடுகளாக ஏற்ற 'ஹான்' அரச மரபினர் கன்பூசியசுவின் கோட்பாட்டை அரச நீதியாகவே பிரகடனப்படுத்தினார். ஆனால் வள்ளுவர் ஒரு குறிப்பிட்ட சமயக் கோட்பாட்டை ஏதும் கூறவில்லை. அவர் சமயக்கணக்கர் மதிவழிகூறாது உலகியல் கூறிப் **"பொருள்இது"** என்றார். எனவே வள்ளுவரை எந்நாட்டவரும் எச்சமயத்தாரும் போற்றுகின்றனர்.

6) கன்பூசியசுவின் கோட்பாடுகள் தற்சார்பு உடையனவாகத் தோன்றுகிறது. ஆனால் வள்ளுவர் எப்பொருள் யார் யார் கேட்பினும் என்றும்; எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளின் மெய்ப்பொருள் காண்பதே! அறிவு என்கிறார்.

7) முன்னோர் வழிபாடு, சடங்குகள், சம்பிரதாயங்களை கன்பூசியசு போற்றியுள்ளார். ஆனால் வள்ளுவர் இத்தகையக் கருத்துக்களைப் பேசவில்லை. மாறாக இறைவழிபாடுபற்றி தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்தவர்களே பிறவியாகிய பெருங்கடலை நீந்துவர் என்றும், 'பற்றுக பற்றற்றான் பற்றினை...' என்றும், 'தனக்குவமை இல்லாதான் தாள் சேந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது' என்றும் கூறுகிறார்.

8) பெண்கள் ஆற்றலில் குறைந்தவர்கள் என்றும், உடலியல் ரீதியாக அவர்கள் ஆசையும், குறைந்த சிந்தனையும் உடையவர்கள் என்றும் அவர்கள் தங்கள் கணவனுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். ஆனால் வள்ளுவர் 'பெண்'ணை பெருமை நிறைந்தப் பெட்டகமாகக் கருதி 'வாழ்க்கைத் துணை நலம்' எனும் அதிகாரத்தை வகுத்து 10 குறளின் மூலம் பெண்ணிற்குப் பெருமை சேர்க்கின்றார்.

புத்தேள் உலகம் - (290), உயர்ந்த உலகம் புகும் - (346), தெய்வத்துள் வைக்கப்படும் (50), வானகமும் ஆற்றலரிது (101), புத்தேள் உலகம் (213), மேலுலகம் (222), அவ்வுலகம் இல்லை (247) அண்ணத்தல் செய்யா அளறு (255)

## ஒற்றுமைகள்:-

1) உள்ளத்தை ஊற்றுக்கண் கொண்டு வெளிப்படுத்துவதே வாய்மை (நடு.13) இதை வள்ளுவர்

''புறந்தூய்மைநீரான் அடையும் அகந்தூய்மை
வாய்மை யாற்காணப் படும்'' - (298) என்கிறார்.

2) பட்டினியால் மாண்புமிகு மனிதன் ஒரு வேளை உணவு கிடைக்கிறது என்றால் கூட அவன் அறநெறியிலிருந்து பிறழ மாட்டான் (முது - 4.5) இதை வள்ளுவர்,

ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை'' - (656) என்கிறார்

3) நாவடக்கம் இல்லாமையால் உண்டாகும் நன்மை யாது? அதனால் அவர்கள் அடைவது வெறுப்பும் - மனச்சோர்வும் அல்லாமல் வேறொன்றுமில்லை - (முது - 5.4) இதை வள்ளுவர்,

''யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'' — (127) என்கிறார்.

4) சிறந்தவை என்று அறிந்தவற்றை உடனடியாகச் செயலில் கடைப்பிடிக்க வேண்டும். (முது 11.21) இதை வள்ளுவர்,

''புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்'' — (538) என்கிறார்.

5) அறநெறி பிறழாது ஆட்சிபுரிய அரசனுக்கு உதவி செய்பவனே சிறந்த அமைச்சன். (முது 11.23) இதை வள்ளுவர்,

''அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை'' — (635) என்கிறார்.

6) உணவுப் பொருட்களில் தன்னிறைவும், போதிய படைபலமும், மக்களுடைய நம்பிக்கையும் உடைய நாடு (அரசு) சிறந்து விளங்கும். (முது 12.7) இதை வள்ளுவர்,

''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வமும் சேர்வது நாடு'' — (731) என்கிறார்.

7) நல்லாட்சி நடத்த விரும்புகின்றவர்கள் கொலைத் தண்டனை விதித்தலையேக் குறிக்கோளாகக் கொள்ளக்கூடாது. நற்பழக்கமாகிய 'காற்று' வீசத் தொடங்கிவிட்டால் தீயவராகிய 'புற்கள்' தாமாகவே வணங்கத் தொடங்குவர் இதை வள்ளுவர்,

''கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்'' — (562) என்கிறார்.

8) அறச்செயல் என்பது யாது? மனிதர்கள் அனைவரிடத்தும் அன்பு செலுத்துவதே ஆகும் (முது 12.22) இதை வள்ளுவர்,

''நல்லாற்றல் நாடி அருளாள்க பல்லாற்றால்
நேரிலும் அஃதே துணை'' — (242)

''அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை'' — (76) என்கிறார்.

9) உயர்ந்த மனிதர் தேவை உண்டாகின்ற பொழுதும் மனச்சான்றிற்கு மாறான வழியில், அதை அடைய முயல மாட்டார்கள். ஆனால் அப்படி அடைய முயலுபவர்கள் கயவர்களேயாவர் (முது 15.1) இதை வள்ளுவர்,

''ஏற்றிற்குரியர் கயவரென்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து'' — (10.80) என்கிறார்.

10) எதைப்பிறர் நமக்குச் செய்யக்கூடாது என்று நினைக்கின்றோமோ அதை நாம் பிறருக்கு செய்யக்கூடாது. அதுவே தலைசிறந்த அறமாகும். (முது 15.23) இதை வள்ளுவர்,

''இன்னா என்த்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்'' — (316) என்கிறார்.

11) இயற்கையாக மனிதர்கள் ஒப்புமையுடையவர்கள்; ஆனால் செயல் அளவிலே வேற்றுமை உடையவர்களாக ஆகிறார்கள். (முது 17.2) இதை வள்ளுவர்,

''உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு'' — (993) என்கிறார்.

12) உயர்ந்தவர்கள் சிறப்பான செயல்களைச் செய்து, உலகிற்கு அறிமுகம் ஆகின்றார்கள். தலைவன் இழிந்த செயல்களைச் செய்து உலகிற்கு தன்னைத் தானே அறிமுகம் செய்கிறார். (முது 15.33) இதை வள்ளுவர்,

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'' — (26) என்கிறார்.

13) உலகில் எங்கிருந்தாலும் அமைதி, பெருந்தன்மை, வாய்மை, மெய்யார்வம், அன்புடைமை என்ற ஐந்தையும் கடைப்பிடிப்பதின் மூலம் முழுமையான அறவாழ்க்கையை வாழமுடியும். (முது 17.7) இதை வள்ளுவர்,

''அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சார்பு ஊன்றியது தூண்'' — (983) என்கிறார்.

14) ஒரு மனிதனின் செயல்களைக் கூர்ந்து நோக்குக. அவற்றால் விளைவன யாவை? என்பதைக் கருதுக... பின்னர் அவன் எத்தகையவன் என்பதை முடிவு செய்க. (முது 2.10) இதை வள்ளுவர், [தெரிந்து தெளிதல்]

''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்'' — (505) என்கிறார்.

15) கடவுளால் மனிதனுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டது 'மனித இயற்கை' இதை முழுமையாக்குவதே அறம். அவ்வாறு அந்த அறச் சட்டத்தைப் போற்றி வளர்ப்பதால் பெறும் பயனே 'பண்பாடு' அத்தகைய பண்பாடு உடைய மனிதரையே உலகம் போற்றும். (நடு 1.1) இதை வள்ளுவர்,

''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு'' — (994) என்கிறார்.

16] நட்புக்கு அடிப்படை ஆர்வமே. [முது 13.27] இதை வள்ளுவர்,

''அன்புஈனும் ஆர்வமுடைமை அதுஈனும்
நண்பெனும் நாடாச்சிறப்பு'' — [74] என்கிறார்.

17] சொல்வதைவிட செய்பவன், காழ்ப்பு உள்ளமற்றவன், விரிந்த மனப்பான்மையுடையவன் குருட்டுத்தனமான ஈடுபாடு இல்லாதவனே சான்றோன். [முது 2;8,9] இதை திருவள்ளுவர் ஆன்று அவிந்தவர்கள், சொல்லிய வண்ணம் செய்பவர், கொள்கையுடையோர்கள், சமநிலையைப் பேணக்கூடியவர்கள், மெய்ப்பொருள் காண்பவர்கள் யாரோ! அவரே சான்றோன் என்கிறார்.

18] குடிக்கத் தண்ணீர், உறங்குவதற்கு தன்கையே தலையணை இவை கிடைக்குமானால் நான் இன்புறுவேன். ஆனால் தீயவழியில் தேடிய செல்வம், அதனால் கிடைக்கும் மதிப்புகளையும் நான் ஒருபோதும் மதிப்பதில்லை. [முது 7:14] இதை வள்ளுவர்,

''அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல'' — [39] என்கிறார்.

சான்றோன் என்றால் சீனமொழியில் 'சுன்சு' என்று கூறப்படுகின்றது.

19]

| | | | |
|---|---|---|---|
| 1. | அமைதியுடைய நடத்தை | — | அவமதிப்பு இல்லை |
| 2. | தாராள மனப்பான்மை | — | பிறர் அன்பைப் பெறலாம் |
| 3. | அன்புடைமை | — | பிறர் உதவிகளைப் பெறலாம் |
| 4. | நேர்மை | — | பிறர் நம்பிக்கையை பெறலாம் |
| 5. | முனைப்பார்வம் | — | மிகுந்த அறிவையும், புகழையும் பெறலாம் |

இதை வள்ளுவர் அறன்வலியுறுத்தல், அன்புடைமை, அருளுடைமை, அடக்கமுடை ஒழுக்கமுடைமை, சான்றாண்மை போன்ற அதிகாரங்களில் விரிவாகவே நமக்கு விளக்கியுள்ளா காரணம் தனிமனித முன்னேற்றமே, தனிமனித ஒழுக்கமே—சமுதாய முன்னேற்றம்! சமுதாப ஒழுக்கம் என்பது வள்ளுவரின் தாரக மந்திரம்! ஆகும்.

## நிறைவுரை :-

இதுகாறும், நாம் சிந்தித்தவற்றுள் இருவருக்குமிடையே வேற்றுமைகளைக் காட்டிலும் ஒற்றுமைகளே அதிகம் இருப்பதை தெளிவாக அறிய முடிகின்றது. ''உயர்ந்தவர்கள் எங்குத் தோன்றினாலும் ஒன்றாகவே சிந்திப்பார்கள்'' என்ற கூற்றை மேற்கோள் காட்டுவதின் மூலம் இவ் ஒப்பீடு தெளிவாகின்றது. இவ்விரு அறிஞர்களுக்கிடையே காணப்படும் வேற்றுமைகள் மேலோட்டமானவை, சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டவை... அந்தந்த நாட்டின் வாழ்வியலைச் சார்ந்தவை என்பதை நம்மால் மறந்துவிட முடியாது.

## விளக்கக் குறிப்புகள் :-

1) திருக்குறள் கடவுளை நம்புகிறது. ஆனால் கடவுளுக்காகச் செய்யப்பட்ட நூலன்று. திருக்குறள் அரசனை நம்புகிறது. ஆனால் அரசனுக்காகச் செய்யப்பட்ட நூலன்று. திருக்குறள் மனிதனைப் பேசுகின்றது. அதோடு மட்டுமின்றி அவனுக்கு வேண்டிய வாழ்வியல் சட்டங்களை வகுத்துக் கூறுகின்றது. ஆதலால் திருக்குறள் ஒரு புதுமறை! அதனால் அன்றோ அது உலகப் பொதுமறை!!

## சீன இலக்கியத் தோற்றம் :-

2) சீனாவில் மஞ்சள் ஆற்றங்கரைப் பகுதியில் 'ஷாங்' அல்லது 'இன்' என்ற இனத்தைச் சேர்ந்த மக்கள் நெடுங்காலமாக வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் மீது கி.மு. 1100-ல் 'சூ' என்ற இனத்தைச் சேர்ந்த மக்கள் படையெடுத்து வெற்றிபெற்று 'சூ' அரச மரபை தோற்றுவித்தனர். இம்மரபினரே அதிக காலம் சீனாவை ஆட்சி புரிந்துள்ளனர். இந்த அரச மரபினர் ஆட்சி காலத்தில்தான் சீன இலக்கியம் அரும்பத் தொடங்கியது. இவர்களின் ஆட்சி காலத்தில் தன் மெய்யுணர்வாளர்களும், சிந்தனைச் சிற்பிகளும், கவிஞர்களும் தோன்றி உள்ளார்.

3) கன்பூசியசு காலத்தில் வாழ்ந்த மூத்த அறிஞர் 'லாவோ' இவர் எழுதிய நூல் 'தாவோவியம்' (TAO) நெறிகள்.

4) ஒரு நாட்டின் பண்பாடும், நாகரீகமும் எத்தகையப் போக்கில் வளர்ந்து இருக்கின்றனவோ அத்தகையப் போக்கிற்கேற்ப அந்நாட்டு இலக்கியம் வளர்ச்சி பெற்றிருக்கும்.

மனிதனின் ஆக்கப்பூர்வமான அறிவின் ஊக்கத்தால் நகர நாகரீகம் தோன்றியது. இக்காலத்தில் பாணனே மூதறிஞனாகக் கருதப்பட்டான். இவன் ஊர் ஊராகச் சுற்றித் திரிபவன் இவர்களிடம் உள்ள இசை, பாட்டு, கூத்து மூன்றும் ஒன்றிய நிலையே இலக்கியமாகத் தோற்றம் பெற்றது. இவர்களது பாடலை ***"ஆடலிசைப்பா"*** என்றனர். இது **"போலச் செய்தல்"** எனும் கொள்கையில் விளைந்தவை. எனவே இவர்களாலேயே இலக்கியம் தோற்றம் பெற்றது எனலாம் இதை ***பாணர்-பாடினியர் காலம் என்பர்*** (The Period of the Bards and Minstrels) கிரேக்கத்தில் மிகப் பழமையான பாடலுக்கு (Molpe) 'மோல்பே' என்று பெயர், அதற்கு ஆடலோடு கூடிய பாடல் என்று பெயர். அதைப் பாடிக் காட்டியவர்கள் **"ஒயோட்ஸ்"** (Aoides) என்று அழைக்கப்பட்டனர். இவர்களால் உருவாக்கப்பட்ட இலக்கியமே வாய்மொழியாக, எழுத்து வடிவம் பெறாமல் வாழ்ந்து வந்திருக்கின்றது. இப்படிப்பட்ட வாய்மொழி இலக்கியங்களை ***"மிதவை இலக்கியங்கள்"*** (Floating Literature) என்பர்.

12)

தலை ## ஞர்களுடைய காலம் (The Period of Poets)

(முத

5) 1. அறிவுப்பசி, 2. உணர்ச்சித் துடிப்பு, 3. கற்பனை, 4. கருத்து, 5. மொழித்திறமை, 6. சமுதாய அறிவு, 7. உள்ள உணர்வு 8. வாழ்க்கை அனுபவம் போன்ற கூறுகளினால் கவிஞர்கள் உருவாக்கப்பட்டனர்.

இவர்களுக்குக் கற்பனை வண்ணங்களாகும், மொழிசுவராகும், அறிவு—எழுதுகோல் ஆகும். இவற்றைக் கொண்டு தீட்டிய சொல்லோவியமே இலக்கியம். இக்காலக் கட்டத்தில் தான் பாபிலோனிய, எகிப்திய, இலக்கியங்களும், இந்தியாவின் வேதங்களும், சீனாவில் முதுமொழிகளும், தமிழகத்தில் சங்க இலக்கியமும் தோன்றியிருக்கின்றன.

6) சீனமொழி பழமையானது. ஆனால் அதனுடைய எழுத்து வடிவம் நமக்கெல்லாம் புதுமையானது. கருத்துக்களை உணர்த்தும் ஓவியங்களே இன்றளவும் எழுத்துக்களாக உள்ளன. இலக்கியத்திலும், எண்ண வளர்ச்சியிலும் சீனர்கள் சிறப்பிடம் பெறுவதற்குக் காரணம், ஓரசைச் சொற்களைக் (Single Syllable) கொண்ட மொழியை அவர்கள் பெற்றிருப்பதே ஆகும்.

### கருவி நூல்கள் :-

1) டாக்டர் க. த. திருநாவுக்கரசு,
திருக்குறள் நீதி இலக்கியம்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5.

2) டாக்டர் ஜி. ஜாண் சாமுவேல்,
இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள்,
மணி பதிப்பகம், சென்னை-85.



# 21ம் நூற்றாண்டுக்கு வழிகாட்டும் திருக்குறள் நெறிகள்

அ. முல்லைவேந்தன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.
பகுதி நேர தமிழ் விரிவுரையாளர்

இயற்கையின் படைப்பில் மனிதன் சிகரமாக விளங்குகிறான். உணர்ச்சியின் பிண்டமான அவன் அறிவு தடுமாறும் போதெல்லாம் தவறுகள் பல செய்கிறான். மக்களினம் முழுவதும் அறிவை அறநெறிப்படுத்தி வாழத் தலைப்பட்டால், நாட்டில் தேவையற்ற போராட்டம் ஒழிந்து அமைதி நிலவும். உலக மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்னும் நோக்கில், பல சித்தனையாளர்கள் அறம் உரைத்துச் சென்றுள்ளனர். இருப்பினும், தமிழ் நிலத்தில் தோன்றிய வள்ளுவரே வையகமெல்லாம் உய்ய வந்த சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறார். அவர்காட்டும் உலகியல் நெறிகள் எக்காலத்துக்கும் பொதுவானவை, உயர்ந்த குறிக்கோளைக்கொண்டவை. திறக்குறள் உலகமெல்லாம் உணர்ந்து பின்பற்றக்கூடிய கருத்துக் கருவூலம். அது "எல்லா நாட்டினர்க்கும், எல்லா மதத்தினர்க்கும், எல்லாக் கொள்கையினர்க்கும் இன்றியமை யாத வாழ்க்கை ஒழுக்கங்களை மிகவும் தெளிவாக எடுத்துக்கூறும் பெருமை வாய்ந்தது' என்று தமிழ்த்தாத்தா டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் புகழாரம் சூட்டுகின்றார். புதிய நூற்றாண்டின் மக்கள் இல்லறத்திலும், நல்லாட்சியோடு கூடிய கல்வியைப் பெறுவதிலும் சமுக நலனிலும் அக்கறை கொண்டு வாழ வேண்டும். அதுவும் வள்ளுவர் வழியில் வாழவேண்டும். இதுவே, இக்கட்டுரையின் நோக்கமாகவும் அமைகிறது.

## இல்லறமே நல்லறம்

"மனிதன் மனத்தால் நடப்பவன், மற்றைய மிருகங்கள் எல்லாம் கால்களால் நடக்கின்றன" என்பார் கிருபானந்தவாரியார். ஆகவே, மனத்தால் உயர்ந்த மனிதன் மனமாசினை நீக்கி தனக்கும், தன்னைச் சார்ந்த சமூகத்திற்கும் பயன்பட வாழ்தல் வேண்டும். அத்தகைய நல்ல உள்ளம் கொண்ட மனிதர்கள் உலகில் உலாவர வேண்டும் என்பதுதான் வள்ளுவருடைய விருப்பம். இவ்வுலக வாழ்வில் பெருந்துன்பங்களும், பேரழிவுகளும் நிகழ்வதற்குக் காரணம் "அன்பு" என்னும் உயிர்ப்பண்பு அதிகம் இல்லாமையே ஆகும். அன்பின் வழியது உயிர்நிலை. அது இல்லா உயிர்களாம் மனிதர்கள் எலும்பும் தோலும் போர்த்திய நடைப்பிணங்களே, என வள்ளுவர் கூறுவது அறியத்தக்கது. அத்தகையை அன்பு என்னும் உயரிய உணர்ச்சியாம் வித்து ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழும் இல்லறவாழ்வில்தான் கருக்கொள்கிறது.

"இல்லறமற்றது நல்லறம் அன்று" இது ஔவையின் அமுத மொழியாகும்' அதனை நோக்க மனையாளுடன் கூடிச் செய்யும் இல்லறமே நல்லறம் ஆகும். மற்ற வாழ்வெல்லாம் நல்லறம் ஆகாது. வள்ளுவரும்

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று" - என்கின்றார்

இல்வாழ்க்கையில் நல்லமுறைமையில் உலகக்கடமைகளை, ஒழுங்குப்படச் செய்து வாழ்கின்றவன் துறவியை விட உயர்ந்தவன் என்று கூறுவது இங்கு உணரத்தக்கது. அறத்தின் விளைநிலம் மனமாகும். அந்த மனம் இல்லறவாழ்வில் தான் பண்படுத்தப்படுகின்றது. எனலாம். பற்பல கடமைகளைக் கொண்ட இல்வாழ்க்கையில் இன்பம் காணுவது மட்டும் நோக்கமல்ல. உலக உயிர்கள் மேல் அன்புகாட்டி வாழுகின்ற உயரிய வாழ்க்கையாம் அருள் வாழ்க்கைக்கு, இல்லறவாழ்வுதான் ஏணிப்படியாக அமைகின்றது.

இல்லறமாம் நல்லறத்தை நடத்துவதற்கு, முதலில் நல்லதோர் வாழ்க்கைத் துணைவி வேண்டும். அதுவும். "மனைத்தக்கமாண்புடையவளாய்" இருத்தல் வேண்டும் "நன்மனைவி உடையார் கடலுலகப் பெரும்புகழும் உடையார்" என்பார் பாரதிதாசன்.

கணவனும் மனைவியுமாகிய இருவரும் ஒருமனம் உடையவராய், உலகியல் நன்மை கருதி வாழும் வாழ்வைத்தான் வள்ளுவப் பெருந்தகையின் இல்லறம் வற்புறுத்துகிறது. அன்பும் அறமும் உடைய நல்ல குடும்பங்களில்தான் தன்னலம் குறைந்து பிறர் நலம் பேணும் நல்லுள்ளம். தோன்றும்.

"மனைக்கு விளக்கம் மடவார்" ஆதலின் அவள் நற்குணங்களும் நல்ல பல அறச் செயல்களைச் செய்யும் மனம் உடையவளாய் அமைதல் வேண்டும். அவ்வாறு அமையப் பெறாத வீடு அச்சம் தரும் புலி உறையும் புதர்க்காடு என்பார்கள்.

"இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்"
என்று மூதுரை கூறுவதும் இங்கு அறியத்தக்கது. வள்ளுவரும்

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக்கடை"

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்" - என்கிறார்

இக்குறட்பாக்கள் கூறும் கருத்துகள் என்றைக்கும் நின்று நிலைக்கும் வாழ்வியல் உண்மை ஆகும்.

"அன்பு சிறந்தால் மலைச்சுமையும் மாலைச்சுமையாகும்"
"அன்பு இறந்தால் மாலைச்சுமையும் மலைச்சுமையாகும்" என்பர்.

இது குடும்ப வாழ்வில் நூற்றுக்கு நூறு விழுக்காடு பொருந்துவதாகும். கணவன் மனைவி உறவானது, அன்பின் அஸ்திவாரம் கொண்டு கட்டப்பட்டிருத்தல் வேண்டு

இருவர் மனங்களிலும் அன்பு ஆறாய்ப்பாயும் போது வாழ்வு சுகமான சுமையாகும். அன்பும் பரிணாமம் பெற்று விரிவடையும். அத்தகைய குடும்ப வாழ்வின், நிறைவுக்கும் மகிழ்ச்சிக்கும் மக்கட்பேறு இன்றியமையாதது. ''மங்கலம் என்ப மனைமாட்சி'' என்று கூறிய வள்ளுவர் அந்த குடும்ப அழகுக்கு அணிகலன்களான நல்லபிள்ளைகள் நாட்டில் எல்லாக் குடும்பங்களிலும் தோற்றம் பெறவேண்டும் என்கிறார். அதுவும் அறிவறிந்த நன்மக்களைப் பெறுவதுதான் ''சிறந்த செல்வம்'' என்று வற்புறுத்துகிறார். அன்புணர்ச்சி. தூயமனத்தில் தோன்றும் உணர்வாகும். அவ்வுணர்வு இல்லறவாழ்வில் விருந்தோம்பலாக, இனியவைகறலாக; செய்நன்றியறிதலாக, நடுவுநிலைமையாக, அடக்கமுடைமையாக; பொறையுடைமையாக; அழுக்காறாமையாக, ஒப்புரவு அறிதலாக, ஈகையாக; அருளுடைமையாக, வாய்மையாக, இவ்வாறு பல்வேறு வாழ்வியல் அறங்களாக மாறுவதனை விரித்துக் கூறுகின்றார் வள்ளுவர். ''விருந்தோம்புதல்'' எனும் அறம்தான் இல்லறத்தானுக்கு முதற்கடமையாகக் கொள்ளப்படுகின்றது. மனைவியோடு வீட்டில் இருந்து பொருளைப் பாதுகாத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம். விருந்தினரை உபசரித்து அவர்க்கு உதவி செய்வதற்கே ஆகும்.

சிலப்பதிகாரத்தில் ஒரு காட்சி : கணவன் வீட்டில் இல்லாமையால் சிறந்த அறச்செயல்களைச் செய்ய முடியாமல் வருந்துகின்ற கண்ணகியை இளங்கோவடிகள் கூறும்போது

''அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை''

என்று குறிப்பிடுகின்றார். அதனை நோக்குமிடத்து, அறத்தின் அடிப்படையில், ''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தமமுயிர்போல் எண்ணி'' வாழும் தீங்கில்லா வாழ்க்கையைத் தான் திருவள்ளுவன் வகுத்துத்தந்ததை இல்லற வாழ்வில் காண முடிகிறது. ஆகவே உலகமெல்லாம் ஒருகுலமாக, இம்மண்ணில் நல்லவண்ணம் வாழ வள்ளுவன் விதைத்த அன்பின் விதை முதலில் இல்லறத்தில் ஊன்றப்பட்டதை அறியலாம்.

### நல்ல அரசும் கல்வியும்

வீட்டுவாழ்வு சிறப்புற வேண்டுமெனில் நல்லதோர் தலைமைப் பண்புள்ள கணவன் மனைவி வேண்டும். அதுபோல், பொதுவாழ்வாம் சமுதாய வாழ்வு மேம்படுவதற்குத் தகுதியுடைய தலைவன் அரசியலில் அமர வேண்டும். இன்று குடியாட்சிக்காலம் மக்களே தாங்கள் விரும்பும் அரசினைத் தேர்வு செய்யும் உரிமை உள்ளது. இருப்பினும் இக்கால அரசியலில், பெரும்பாலும் பொதுநலனுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்பவர்கள்.—நம் தீவினைப் பயனோ ! என்னவோ ! மிகுதியும் குறைந்து வருகிறார்கள். சுயநலமின்மை, ஒழுக்கம், உண்மை. பழிக்கு நாணுதல் போன்ற உயரிய பண்புகள் இன்றைய அரபியலில் அருகி வருகின்றன.

வள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக் காலம். அவர் காலத்தில், பல்வேறு அரசின் வாழ்வையும் வீழ்வையும் கண்டிருப்பார். அந்தப் பட்டறிவால், பொருட் பாலில் அரசனைப் பற்றியும் அவர் தகுதியைப் பற்றியும் பலபடக் கூறியுள்ளார். ''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்று புறநானூறு கூறுவதால் அன்றைய நாளில் அரசன் எந்த அளவுக்கு உயர்வாக மதிக்கப்பட்டான் என்பதை அறிய முடிகிறது. ''குடி-பழி தூற்றும் கோலோன் ஆகுக'' என்று வஞ்சினம் பேசிய மன்னனைப் புறநானூற்றில் காண முடிகிறது. இவையெல்லாம் அக்காலத்தில் மக்கள் வாழ்வில் மன்னர்கள் தன்னலம் மறந்து செயல்பட்ட வெளிப்பாடுகளே எனலாம். முறைசெய்து, வாழும் வகையில் அரசியல் நடத்தும் மன்னன் மக்களால் இறைவன் என்று நன்கு மதிக்கப்பட்டான். திருக்குறள் முடியரசுக் காலத்தில் தோன்றிய நூல் என்றாலும் இன்றைய அரசியலுக்கும் பொருந்துவதாய் உள்ளது.

''திருவுடை மன்னனைக் கண்டபோது திருமாலைக் கண்டேனே'' என்றும் மணிமொழிக்கிணங்க மன்னன் குடிமக்கள் நலம் ஓம்பும் அரசனாக இருத்தல் வேண்டும். ''மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி'' ஆகவே, அவன், அறம் தவறாதவனாகவும், ஆண்மையுள்ளவனாகவும், மானம் மிக்கவனாகவும் இருக்க வள்ளுவன் வற்புறுத்துகிறான். பொருளாதாரத்துறையில் அரசனின் பொறுப்பு மிக்க கடமைகளைக் கூறுவது சிந்தனைக்கு விருந்தாகும்.

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு''. என்ற குறள் அரசனுக்குள்ள பொறுப்புமிக்க பணியை அழகாகச் சுட்டுகிறது.

ஆட்சித்தலைவன் காட்சிக் கெளியவனாகவும், இன்சொல் பேசுபவனாகவும், இருத்தல் வேண்டும். இவை தவிர, அவனுக்கு கல்வி, கேள்வி, அறிவுடைமை, குற்றம் கடிந்து வாழ்வு, பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை போன்ற பண்புகள் யாவும் வேண்டும். அரசனுக்கு கல்விதான் முதல தகுதி என்று கூறினாலும் ''வாழும் மக்களுக்கெல்லாம் கல்வி வேண்டும்'' என்பதை வள்ளுவன் வற்புறுத்தத் தவறவில்லை.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்பது அவரது வாக்கு.

அன்றைய கல்வியின் நோக்கம், அறிவு பெறுவதும் - ஒழுக்கம் பேணி உயரிய வாழ்வைப் பெறுவதாகவும் அமைந்தது. கல்லாதவர்களை ''விலங்கொடு மக்கள் அனையர்'' என்றும் அவர்களுடைய கண்களைப் புண்கள் என்றும் வள்ளுவர் சாடுகிறார். ''கல்லுதல்'' என்பதற்கு ''தோண்டுதல்'' என்பது பொருள். மக்களுக்குள் மறைந்துள்ள ஆற்றலை வெளிப்படுத்த உதவும் சாதனமே கல்வி எனலாம், ''மனிதனுக்குள் புதைந்திருக்கும் முழுமையை வெளிப்படுத்தும் முயற்சியே கல்வி எனப்படும்'' என்பார் சுவாமி விவேகானந்தர். ''கற்றவர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு'' என்பார்கள். அது போல் இன்று உயரிய கல்வியாளர்கள்,

சிறந்த பயிற்சியாளர்கள் பிற நாடுகளுக்கும் சென்று பணிபுரிகின்றார்கள். இவ்வுண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த வள்ளுவனும்

“யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு” என்கின்றான்.

இன்றைய கல்வி தொழிலையும், வேலைவாய்ப்பையுமே பெரும்பாலும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதனால், தனிமனித ஒழுக்கம் பெரிதும் குறைவு படுகிறது. கற்றதனால் ஆயபயன்-இறைவனைத் தொழுவது என்று கூறிய வள்ளுவர், கல்வியினால் பெற்ற அறிவினை விளக்குமிடத்து

“அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை” என்றார்.

ஆகவே, கல்வியின் நோக்கம் பலவாக இருப்பினும் சிறப்பாக மனிதனைப் பண்படுத்துவதே தலையாய நோக்கமாக இருத்தல் வேண்டும். படித்தவன் பாவம் செய்தால் ஐயோ என்று போவான்” என்பான் பாரதி. ஆகவே, வெற்று அறிவு மட்டும் இவ்வுலகுக்குப் பயன்தராது. கல்வியாளர்கள் உயரிய பண்பாளர்களாகவும் மனித நேயம் கொண்டும் விளங்கவேண்டும். இதுவே வள்ளுவனின் எண்ணம்.

“அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பு இல்லா தவர்” என்பது அவரது மந்திர வாக்கு.

## வறுமையற்ற உலகு

ஒரு நாடு நல்லதோர் தலைமையைப் பெற்றால் மட்டும் சிறப்பு பெற்றுவிட முடியாது. பசியின்றி வாழும் மக்களையும் பெற்றிருக்க வேண்டும்.

“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு”

என்பது வள்ளுவன் கூறும் நாட்டின் இலக்கணம் பசித்துன்பம் மிகுந்த நாட்டில் உயர்ந்த பண்பாட்டைக் காணமுடியாது. பிணியும், பகையும் தோன்றுவது உறுதி. அன்பு, அறிவு போன்ற உயரிய பண்பாடுகள் எல்லாம் அழிந்துவிடும். வறுமை மனிதர்களை ஒழுக்கம் கெட்டவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் ஆக்கிவிடுகிறது இந்த உலகுக்கு ஒரு சாபக் கேடாக அது இருக்கிறது. “வறுமையே பாவங்களில் பொல்லாதது” வறுமையில் வாழ்வதே கொடிய பாவவாழ்க்கை; அந்தப் பாவத்தைப் போக்குவதை முதற்கடமையாகக் கொள்ள வேண்டும்.” என்பார் பெர்னாட்சா. இவ்வுலகில் பார்க்கக் கூடாதது பசியும் பஞ்சமும், என்பது வள்ளுவ எண்ணம். “வறுமையை விடக் கொடியது எது? - வறுமைதான் என்று கூறுவது அறியத்தக்கது மனித குலத்தின் உயிருக்கே உலைவைக்கும் வறுமையை “இன்மை என பாவி” என்கின்றான் பசி என்னும் தீப்பிணி காலம் காலமாக கவிஞர்கள் பலரையும் கதற வைத்திருக்கின்றது.

“பசி மட்டும் இல்லையென்றால் நாங்கள் எல்லாம் கடவுள்களே” என்கிறார். ஒரு கவிஞர். பசியால் மற்றவரிடம் இரந்து வாழும் வாழ்க்கை உருவாகிறது.

மனிதனிடம் உள்ள மானத்தையும், உயிர் உணர்வையும் சுட்டுச் சாம்பலாக்கும் வறுமையின் கொடுமையை விளக்குமிடத்து

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்" என்கின்றார்.

வறுமைப் பேய் மனிதர்களின் குடிப்பெருமையை அழித்து, அழகினை சிதைத்து, புகழையும் கெடுத்துவிடும். ஏழையின் இதயத் தவிப்பை நன்கு உணர்ந்தவர் வள்ளுவர் வறுமைத் துன்பம் வரும்போது தூக்கம் வருமா? வராது. நெருப்பினுள் கூட மருந்து மாயங்களைத் தடவி நிம்மதியாய் தூங்கலாம். ஆனால், வறுமையில் தூங்க முடியாது என்கிறார்.

"வன்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்" என்று கம்பன் பாடியதுபோல் நாடெல்லாம் வறுமை நீங்கி வளமாக வாழவேண்டும். அதுவே உலகுக்கு ஒரு நூல் செய்த வள்ளுவனின் உள்ளக்கிடக்கையாகும். அவன் இவ்வுலகின் ஏற்றத்தாழ்வுகளை அறிவுக்கண் கொண்டு ஆராய்ந்தான். மக்கள் தம் வாழ்வைச் சமப்படுத்த வேண்டு-மானால் ஈதலும் ஏற்றலும் அவசியம் என உணர்ந்த "பசியால் வாடும் மக்களுக்குப் பசியாற்றுவதே உயர்ந்த அறம்" என வலியுறுத்துவது அறியத்தக்கது. வறுமையில் வாழும் சமூகத்திற்கு உதவி செய்வதே தாளாற்றித் தந்த பொருள் பெற்ற தனி மனிதனின் தலையாய கடமை என்கின்றார். "செல்வத்துப் பயனே ஈதல்" என்று புறநானூறு அறம் பாடும். நல்லவன் ஒருவனது செல்வம் ஊருணி போலவும், பழமரம் போலவும், மருந்து மரம் போலவும் இச்சமூகத்திற்குப் பயன்பட வேண்டும் என்று வலியுறுத்திச் செல்கின்றார். கஞ்சனிடம் செல்வம் சேர்ந்தால் அது "நாய் பெற்ற தெங்கம் பழம்" போல பயன்படாமலேயே அழியும்.

கொடிய வறுமையிலும் செம்மையாக வாழ்பவனே சிறந்த மனிதன் ஆவான் அதனை வள்ளுவர்,

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" என்கின்றார்.

இவ்வுலகில் இறைவனின் அன்புக்கு அடுத்ததாகத் தாயின் அன்பைச் சொல்லுவார்கள். ஆழம் காணமுடியாத அன்புக் கடலான பெற்ற தாய் பசியால் துன்புறும்போது பொறுத்துக்கொள்ள முடியுமா? முடியாது. "இறப்பவருவழி இழிவந்த செய்தாயினும் உய்க" என்பது வடநூல் முடிவு. ஆனால் வள்ளுவன் சான்றோர்களால் பழிக்கும் செயல்களை எந்தச் சூழலிலும் செய்யற்க என்று ஆணையிடுகின்றான்.

இதுதான் வள்ளுவ அறம் தனித்து நிற்பதற்குக் காரணம் ஆகும். பகுத்துண்ணுதல், பல்லுயிர் ஓம்புதல் முதலிய பண்புகள் மனிதருள் மேலோங்கும் போதும், உழைக்கின்ற மக்கள் நாட்டில் அதிகம் உருவாகும் போதுமே வறுமை தீர்ந்த உலகத்தை கண்டு மகிழ முடியும்.

**சமூக நெறிகள்**

"மக்களை இணைத்து வைப்பது அன்பு. அவ்வுயிர்களை இயக்க வைத்து சிறப்பிப்பது அறிவு". என்பர். சமூகமாகக் கூடி வாழப் பிறந்தவன் மனிதன். அவனது அன்பும் அறிவும் வளர்ந்தால்தான் சமூகம் நன்மை பெறமுடியும் அதற்குத் தடையாக இன்று சாதி, மதம், இனம், மொழி போன்ற பேதங்கள் உள்ளன. இன்று சாதாரண மனிதன் தன்னை இந்த சாதியைச் சார்ந்தவன் என்று அறிமுகப்படுத்திக் கொள்வதில் பெருமை அடைகின்றான். இதனால், மனித நேயம் குறைகிறது. சாதிச் சண்டைகள் பெருகி வருகின்றன. இத்தகைய தீய நெறியானது தேவையற்ற ஒன்றாகும். வள்ளுவரும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" என்கின்றார்.

கவிமணியும், "பிறப்பினால் யாருக்கும் பெருமை வாராதப்பா, சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டும் அப்பா" என்று கூறுவதும் இங்கு அறியத்தக்கது.

மனிதன் அஞ்சுவது அஞ்சி உறுவது உலகு உவப்பச் செய்து நன்னெறியில் வாழ வேண்டும் என்பதே வள்ளுவரின் எண்ணம். மன உறுதியும், அறிவுத் தெளிவும் இல்லாத சிலர் நாடக் கூடிய தீய செயல்களை வள்ளுவர் வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது போன்ற அதிகாரங்களில் வன்மையாகக் கண்டிக்கின்றார். இக்காலத்தில் பெரிய நகரங்களில் பரத்தையர் இனம் இருப்பது போலவே பண்டைய தமிழகத்திலும் அதிகமாக இருந்தனர். அகப்பொருள் நூல்களில் விலைமகளிர் பற்றிய குறிப்புகள் அதிகம் உள்ளன. வான்புகழ் வள்ளுவர்தான் பொருட்பெண்டிர், பொய்ம்மை முயக்கத்தைக் கடுமையாகச் சாடுகின்றார். அது இருட்டறையில் முன்பின் அறியாத ஒரு பிணத்தைத் தழுவியதை ஒக்கும் எனக்கூறுகின்றார். பரத்தமை ஒழுக்கம் முற்றிலும் கடியப்படக்கூடிய ஒன்று என்பதற்காகவே, இத்தகைய இழிவான உவமையைப் பயன்படுத்தியுள்ளமை அறியத்தக்கது. "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பார்கள். ஆகவே, மனிதன் நற்பண்புகளைக் கடைப்பிடித்து சமுதாயத்திற்கு உதவிட வேண்டும்.

**நிறைவுரை**

"தனிமனிதன் என்ற மலரை எடுத்து நூற்றுக்கணக்கில் தொடுத்தால்தான் சமுதாயம் என்ற மாலை அமைகிறது. ஒவ்வொரு மலரும் நேர்த்தியாக இருந்தால் தான் மாலையும் நேர்த்தியாக இருக்கும்". சமுதாயம் முல்லை, மல்லிகை முதலிய மணம்மிகு மலர்களால் அமையப் பெற வேண்டுமே தவிர கள்ளிப் பூக்கள் பூக்கின்ற களமாக மாறி விடக்கூடாது. "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்பது ஔவையார் வாக்கு.

இருபத்தியோராம் நூற்றாண்டில் வள்ளுவன் காட்டிய வழியில் தொல்லுலக மக்கள் எல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் கொண்டு உலக மக்கள் எல்லாம் ஒன்று பட்டு வாழ வேண்டும். அன்பு மலர் பூத்து அறக்கனிகள் உருவாக வேண்டும். வறுமையும் அறியாமையும் அகல வேண்டும். அன்பும் அறனும் தழைக்க வேண்டும். போரும் பூசலும் ஒழிந்து எங்கும் அமைதி நிலவ வேண்டும். அதுதான் வள்ளுவனுக்குச் செய்யும் கைம்மாறு ஆகும்.

வள்ளுவ நெறி வாழட்டும் !

# P. G. Chemistry Association
# Sri Paramakalyani College, Alwarkurichi.

## I Meet

| | | |
|---|---|---|
| Resource Person | : | Scientist A.V. Ramanathan<br>Heavy Water Project Tuticorin |
| Topic | : | Uses Heavy Water in Atomic energy |
| Date | : | 7—3—2000 |

## II Meet

| | | |
|---|---|---|
| Resourch Person | : | Dr. S. Kumaresan<br>Reader, Department of Chemistry<br>V. O. C. College, Tuticorin |
| Topic | : | Self Assembly<br>Host Guest Interaction |
| Date | : | 10—3—2000 |

**Prof. N. Padmanaban**
Head of the Department